# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 21.10.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஏறக்குறைய ஒரு மாதத்திற்கும் அதிகமாக நான் ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தேன். இதில் ஜெர்மனி, நார்வே, ஹாலந்து, டென்மார்க், பெல்ஜியம் போன்றவை அடங்கும். அல்லாஹ்வின் அருளால் இந்த சுற்றுப் பயணத்தின்போது ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறை உதவிகளைக் காண முடிந்தது. எங்கு வழக்கம் போல் ஜமாஅத்திற்குள் ஈமான் மற்றும் தூய்மையில் முன்னேறுவற்கான முன்மாதிரி தென்பட்டதோ அங்கு அல்லாஹ்வின் அருளால் அந்நியர்கள் மத்தியிலும் ஜமாஅத்தின் தாக்கம், அந்நியர்களை ஜமாஅத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சி, இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கான அசாத்தியமான கவனம் ஆகியவை முன்பை விட அதிகமாக தென்பட்டது. இது இறைவனது சிறப்பான அருளாகும். ஜமாஅத் முன்னேற்றத்தின் பக்கம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், நமது முயற்சிகளை விட அதிகமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அறிமுகம் மற்றும் அவர்கள் மூலமாக உண்மை இஸ்லாத்தைப் பற்றிய தூதுச்செய்தி ஆகியவற்றை உலகத்திற்கு எட்ட வைப்பதற்கான நல்ல விளைவு தென்படுகின்றது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்தின் மீது ஓர் அஹ்மதியை மேலும் அதிகமாக உறுதிப்படுத்துவதாகும். ஒருவேளை இது மனித முயற்சி மூலம் நடைபெறுவதாக இருந்தால், உலக அளவில் சிறிய அளவில் கூட நமது ஜமாஅத்தின் பக்கம் எவருக்கும் கவனம் ஏற்பட்டிருக்காது. எனவே இந்த கவனம் மற்றும் முன்னேற்றங்கள் இறைவாக்குறுதிகளாகும். இவைகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன; நமக்கு தென்படவும் செய்கின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்தைப் பற்றி இறைவனது மிகப்பெரிய வாக்குறுதிகள் இருக்கின்றன. மனிதனுடைய எந்த அறிவும், தொலைநோக்குப் பார்வையும் அல்லது உலகக் காரணிகளும் இந்த வாக்குறுதிகள் வரை நம்மை கொண்டு செல்ல முடியாது. பிறகு நமது பகைவர்கள் இந்த ஜமாஅத் உலகவாதிகளின் வழியில் இது ஒரு பிரிவாக இருக்கிறது என நினைக்கின்றார்கள். இன்றைய நாட்களில் முஸ்லிம்களில் பெரும்பாலார் ஜமாஅத்தைப் பற்றி இவ்வாறு தான் கருதுகிறார்கள். அல்லது உலமாக்கள் மக்களை இவ்வாறு கருத வைத்துள்ளார்கள். இதன் மூலம் இதனை ஒரு உலக விஷயமாக அல்லது ஒரு உலக அமைப்பாக கருதுகிறார்கள். மேலும் பல வழிகளில் ஹஸரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இழிவுபடுத்துகிறார்கள். பல பெயர்களை சூட்டுகின்றார்கள். நமது உள்ளங்களை காயப்படுத்துகின்றார்கள். இந்த மக்கள் எப்படி நினைத்தாலும் பரவாயில்லை.

**இவ்விஷயங்களை வெளிப்படுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் தான் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான் என்பதை நான் அறிவேன். மேலும் அவனுடைய அருளினால் தான் இது வளர்கிறது. உண்மை என்னவென்றால், இறைவனுடைய நாட்டம் இல்லாமல் எந்த சமுதாயமும் முன்னேற்றம் அடைய முடியாது; வளர்ச்சி அடையவும் முடியாது. ஆனால் அல்லாஹ் நாடிவிட்டால் அந்த சமுதாயம் விதை போன்றதாகும். விதை முளைப்பதற்கு முன்பு அதன் வளர்ச்சியைப் பற்றி எவருமே அறிந்திருக்க மாட்டார். இந்த சமுதாயத்தின் வளர்ச்சியைக் கூட சாத்தியமற்றது என கருதுகின்றனர். எனவே இது இறைவனது ஜமாஅத் ஆகும். ஜமாஅத்துடன் ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறை உதவி வெளிப்படுவதை நம்மால் காண முடிகிறது. ஜமாஅத் முன்னேற்றத்தைக் கண்டு உலகவாதிகள், பகைவர்கள் கொதித்துப்போய்

இருக்கிறார்கள். இதனால் இன்றைய நாட்களில் ஜமாஅத்துடைய எதிர்ப்பும் மிக அதிகமாக உள்ளது. கடந்த குத்பாவில் இதனைப் பற்றி கவனமூட்டியிருந்தேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது இறைநாட்டம் ஆகும். ஜமாஅத் முன்னேற்றம் அடையும். இஸ்லாத்தின் வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தின் மூலமே கிடைக்கப் பெறும். இன்ஷா அல்லாஹ் அவ்வாறே நடைபெறும். இந்த பகைவர்களின் எல்லா விதமான முயற்சியும், எதிர்ப்பும் என்ன செய்ய முடியும்? நல்லியல்பு கொண்ட ஒவ்வொருவரும் இந்த ஜமாஅத்தின் மடியில் விழுவர் இன்ஷா அல்லாஹ்.

எவ்வாறிருப்பினும் பொதுவாக நான் ஒவ்வொரு சுற்றுப் பயணத்திற்குப் பிறகும் சுற்றுப்பயணத்தின் நிலைமைகளைப் பற்றி சுருக்கமாகக் கூறுவேன். இன்றும் உங்கள் முன்பும் சிலவற்றைக் கூறுவேன். அல்ஃபஸ்லில் ஓரளவு விஷயங்கள் வந்து விடும். சில விஷயங்களை மட்டும் கூறுகின்றேன். இதன் மூலம் நம்மீது பல கோணங்களில் இறங்கக்கூடிய அல்லாஹ்வின் அருளும் பிரகாசம் அடையும்.

அஹ்மதிகளுக்கு சுற்றுப் பயணத்தின் போது சந்திப்பதன் மூலம் பல பலன்கள் ஏற்படத்தான் செய்யும். மேலும் அந்நியர்களுக்கும், உலகவாதிகளுக்கும் இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. அவர்களுக்கும் பலன் கிடைக்கின்றது. இஸ்லாத்தின் உண்மையை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. சில சான்றோர்கள் அல்லது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாளர்களாக இருக்கக்கூடியவர்கள். ஒருவேளை அஹ்மதிகள் உலக நோக்கத்திற்காக அல்லது சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக தனது சுற்றுச்சூழலில் வாழக்கூடிய அஹ்மதிகள் தான் சந்திக்கக் கூடியவர்களுக்கு சாந்தி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியை எட்ட வைக்கிறார்கள். இஸ்லாத்தின் அழகை வெளிப்படுத்துகிறார்கள் என எண்ணுகின்றனர்.

பல இடங்களில் இந்த மக்கள் நேரடியாக என்னிடம் அஹ்மதிய்யத் என்ன என்பதைக் கேட்க விரும்புவதை நான் உணர்ந்தேன். இதற்கு முன்பு அவர்களுக்கு அஹ்மதிகள் தெரியப்படுத்தி இருந்தாலும் சரியே! தனது திருப்திக்காக என்னிடமிருந்து கேட்க விரும்புகின்றார்கள். எனவே அந்நியர்களுடன் ஏற்படக்கூடிய இந்த சந்திப்புகளில் மற்ற விஷயங்களைத் தவிர தொடர்பை விரிவுபடுத்துவதற்கும் சந்தேகங்களை களைவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

நான் முன்னர் கூறியது போன்று சில சந்தர்ப்பங்களில் இதனைப் பற்றி கூறியும் இருக்கின்றேன். ஜெர்மனி ஜமாஅத் இறை அருளால் தப்லீக் மற்றும் தொடர்பில் சிறப்பான ஓர் முயற்சியை செய்து வருகின்றது. முயற்சிகள் முதலில் இருந்ததை விட மிக அதிகமாக இருக்கின்றது. இதன் காரணமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தி மற்றும் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் மிக அதிகமாக ஜெர்மன் சமுதாயங்கள் வரை சென்றடைகின்றது. இந்த தொடர்பிலுள்ள சில படித்த சான்றோர்கள் என்னை சந்திக்க வைப்பதற்கான ஏற்பாட்டையும் இவர்கள் செய்திருந்தார்கள். பிராங்ஃபோர்ட் பல்லைக்கழக பேராசிரியர்கள் என்னை சந்திக்க வந்திருந்தார்கள். இவர்களை சந்திப்பதற்கான ஏற்பாட்டை நமது இளைஞர்கள் தான் செய்திருந்தார்கள்.

இறை அருளால் ஜெர்மனியில் சில காலங்களாக இளைஞர்களிடம் ஒரு விழிப்புணர்வு இருப்பதை நான் பார்க்கின்றேன். அவர்களுடைய தொடர்புகளும் விரிவாகிக் கொண்டே செல்கிறது. தப்லீகின் பக்கமும் ஆர்வம் இருக்கின்றது. எவ்வாறிருந்த போதிலும் சில சந்திப்புகளைப் பற்றி நான் கூறுவேன். இதனுடன் மற்ற ஜமாஅத்துகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறுவேன். பிராங்ஃபோர்ட்டில் மார்பர்க் பல்கலைக்கழகம் இருக்கின்றது. அங்குள்ள இரண்டு பேராசிரியர்கள் என்னை சந்திக்க வந்தார்கள். இருவரும் Ph.D மருத்துவர்கள் ஆவார்கள். பெய்ரி ஹாக்கர், ஆப்வெஸ்ட் ஹிவ்ஜ். இவர்கள் இருவரும் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கல்வியின் பேராசிரியர்கள் ஆவார்கள். இவர்களுக்கு அரபியும் தெரியும். இஸ்லாத்தைப் பற்றிய ஞானமும் போதுமான அளவு இருக்கிறது. இவர்களில் ஒருவர் துருக்கி மொழியில்

சிறப்பு பெற்றவராவார். இவர்களது கட்டுரைகள் இஸ்லாமிய வரலாற்றைப் பற்றியதாகும். பிறகு இவர்களிடம் இஸ்லாமிய வரலாறுகளைப் பற்றியும் பேசப்பட்டது. இவர்களிடம் உங்களுடைய வரலாற்று ஆசிரியர்கள் அல்லது மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்களின் தாக்கத்திற்கு ஆளானவர்களின் நூல்களை மட்டும் படிக்காதீர்கள். மாறாக சில அரபி வரலாற்று ஆசிரியர்களால் எடுக்கப்பட்ட உண்மை விஷயங்கள், ஹதீஸ்கள் போன்றவற்றையும் எடுக்க வேண்டும் என கூறினேன்.

இதைப் போன்று மிர்ஸா பஷீர் அஹ்மத் உடைய ஸீரத்துன் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், அதன் ஒரு பகுதி மொழியாக்கம் செய்யப்பட்டு விட்டது. அதனை கொடுக்கக் கூறியிருக்கின்றேன். அதனையும் படியுங்கள். அதில் வரலாறும் கூறப்பட்டிருக்கும். சில ஆட்சேபனைகளுக்குப் பதிலும் கூறப்பட்டிருக்கும். இதன் மீதி பகுதியும் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும். இது மிகவும் சிறந்த நூல் ஆகும். இப்படிப்பட்ட மக்களுக்கு வரலாற்றுடன், ஆட்சேபனைக்குரிய பதிலும் கிடைத்து விடும்.

மேலும் இவர்களுடைய பல்கலைக்கழக நூலகத்தில் ஐந்து பாகங்களைக் கொண்ட விளக்கவுரை மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பில் வந்துள்ள ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலையும் வைக்கக் கூறியுள்ளேன். இன்ஷா அல்லாஹ் அது சென்றடையும். மேலும் அவர்களை M.T.A. பார்ப்பதற்கும் கூறியிருந்தேன். இதனைப் பார்ப்பதன் மூலமாக பல நல்லியல்பு கொண்டவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி உண்மை தெரிய வருகிறது. சரியான போதனைகள் தெரிய வருகிறது. அவர்கள் கேட்டார்கள்: எகிப்திலுள்ள அல்அழார் பல்கலைக்கழகத்தில் என்ன நடந்தது? அங்குள்ளவர்களிடம் பேசினீர்களா? என்றார்கள். நான் கூறினேன். அங்குள்ள பேராசிரியர்களிடம் சில வருடங்களுக்கு முன்பு பேசப்பட்டு வந்தது. பிறகு அரபி Desk ஐச் சார்ந்த செய்யது பாதிஹ் சாஹிப் அவர்கள் அவர்களுக்கு கொடுப்பதற்காக ஒரு நூலைத் தயார் செய்தார்கள். அது அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எவ்வாறிருந்தபோதிலும் இவர்களது உள்ளம் கடினம் வாய்ந்ததாகும். நல்லியல்பு கொண்டவர்கள் படித்தால் அவர்களது உள்ளம் கண்டிப்பாக திறக்கும். இந்த உரையாடல் மிக நீண்டதாக இருந்தது. நல்ல தாக்கத்தைப் பெற்றவர்களாக அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

பிராங்ஃபோர்ட்டில் இரண்டு பள்ளிவாசல்களுக்கிடையிலும் உள்ள தூரம் ஒன்றரை கிலோ மீட்டரை விட கொஞ்சம் அதிகமாகும். மற்றொன்று 70, 80 கிலோ மீட்டருக்குள் இருக்கிறது. இரண்டு பள்ளிவாசலுக்கான அடிக்கல் வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அங்கு ஒரு பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டு விழாவில் அங்குள்ள மேயர் சார்பாக துணை மேயர் வந்திருந்தார். அந்த விழாவில் அவர் சில விஷயங்களைக் கூறினார். நானும் சில விஷயங்களை பள்ளிவாசல் சம்பந்தமாக எடுத்துரைத்தேன். ஆனால் அவர் பேசும் போது கூறினார். நான் கேள்விப்பட்டேன். இங்கு பாருங்கள். இந்த சிந்தனை பழையது கிடையாது. மாறாக இந்த படித்த ஐரோப்பிய நாடுகளில் இந்த நிலை நீடிக்கின்றது. நான் முஸ்லிம்களிடமிருந்து கேட்டுள்ளேன். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு திருக்குர்ஆன் படிப்பது அல்லது பார்ப்பது பாவமாகும். இவ்வாறு யார் கூறியது? என்று நான் கேட்டேன். நீங்கள் தற்பொழுது திலாவத்தை கேட்டீர்கள். அதன் பொருளையும் கேட்டீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகத்திற்காக வந்தார்கள். அனைத்து மனித இனத்திற்காக வந்தார்கள். இதனை அல்லாஹ், அன்னார் மூலமாக அறிவிக்கச் செய்தான். திருக்குர்ஆன் ஒவ்வொரு நல்லியல்பு கொண்டவருக்கும் ரஹ்மத் மற்றும் நிவாரணம் ஆகும். நீங்கள் கேட்டது முற்றிலும் தவறான செய்தியாகும். எங்களுடைய மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆன் உங்களுக்கு கொடுக்கப்படும். அதனை படியுங்கள். இதுதான் குர்ஆனின் போதனையைப் பற்றிய சிந்தனையாகும். இன்னும் பல இடங்களில் சில முஸ்லிம் பிரிவினர்கள் இவ்வாறு கூறி வருகின்றார்கள். ஆனால் குர்ஆனைப் பரப்புவதற்காக முயற்சி செய்யக்கூடிய அஹ்மதிகள் மீது தடுப்புகள் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. சுருக்கமாகக் கூறுகின்றேன்.

இந்தியாவிலுள்ள டெல்லியில் ஒரு திருக்குர்ஆன் கண்காட்சி நடத்தப்பட்டது. மிகவும் நல்ல இடத்தில் மிகப்பெரிய இடத்தில் நடைபெற்றது. அது மிகவும் அழகான முறையில் திருக்குர்ஆனுடைய போதனைகளைப்

பற்றி வடிவமைக்கப்பட்டிருந்தது. அதனை இந்துக்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள் மற்றும் படித்த முஸ்லிம் சான்றோர்களும் அதனை காண வந்தனர். இது மூன்று நாட்களைக் கொண்ட கண்காட்சியாகும். ஆரம்ப இரண்டு நாட்களில் இதற்கெதிராக பெயர் தாங்கிய உலமாக்கள் எந்த அளவு அமுத்தத்துடன் கூச்சல் போட்டார்கள் என்றால் அங்குள்ள அரசாங்கம், இதன் மூலம் குழப்பம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி மூன்றாம் நாள் நமது ஜமாஅத்திடம் கண்காட்சியை நிறுத்து விடுமாறு விண்ணப்பம் வைத்தது. அங்குள்ள மிகப்பெரிய நாளிதழ்கள் இந்தக் காட்சியைப் புகழ்ந்து எழுதியிருந்தனர். இது மிகவும் உயர் தரமான கண்காட்சி என்றும், திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் ஞானங்களைப் பற்றி இப்போதுதான் தெரிய வந்துள்ளது எனவும் எழுதியுள்ளனர். சில முஸ்லிம்களும் திருக்குர்ஆனைப் பற்றி இவ்வளவு அழகான ஞானம் இதற்கு முன்பு தென்பட்டதில்லை என கூறியுள்ளனர். இப்படிப்பட்ட பெயர் தாங்கிய முல்லாக்கள் எப்போதும் இடையூறு செய்து கொண்டேயிருப்பார்கள். எப்படிப்பட்ட தவறான எண்ணம் கொண்டுள்ளார்கள் என்றால் அது பற்றி ஆச்சரியம் ஏற்படுகிறது.

மேலும் இன்னொரு விஷயம் ஞாபகம் வருகிறது. நேற்று முன் தினம் கடிதங்களைப் படிக்கும் போது பார்த்தேன். ஒரு மனிதர் பாகிஸ்தானிலிருந்து எழுதியிருந்தார். அதில் அவர் அஹ்மதியல்லாத ஒரு நபரிடம் துக்கம் விசாரிக்கச் சென்றார் என்றும், அங்கும் மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். அதில் ஒரு மனிதர் கூறினார்: அஹ்மதி ஆவதற்கான வழி என்னவென்றால், அஹ்மதி ஆவதற்கு முன்பு உங்களை ஒரு அறையில் அடைத்து விடுவார்கள். அங்கு அலமாரியில் திருக்குர்ஆனை வைப்பார்கள். பிறகு அந்த அலமாரியை உலுக்கச் சொல்வார்கள். அவ்வாறு உலுக்கும் போது திருக்குர்ஆன் கீழே விழுந்து விட்டால் நீங்கள் உறுதியான அஹ்மதியாகி விட்டீர்கள் என்பதாகும். இதுபோன்ற சிந்தனைகளும், இதுபோன்ற பொய்யான விஷயங்களை இவர்கள் கூறிக்கொண்டு வருகின்றார்கள். இப்படிப்பட்ட மக்கள் மீது சாபம் விழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? எவ்வாறு சமுதாயத்தை முட்டாள்களாக ஆக்கி விட்டார்கள் என்றால் சிந்தித்துச் செயல்படுதவதற்கான நிலையிலேயே அவர்கள் இல்லை.

எவ்வாறிருப்பினும், ஜெர்மனியைப் பற்றிய விஷயங்களை நான் கூறிக் கொண்டிருந்தேன். ஜெர்மனியில் பிராங்ஃபோர்ட்டில் தங்கியிருக்கும் போது நீங்கள் M.T.A. மூலமாகவும் பார்த்திருப்பீர்கள். குத்தாம், அத்ஃபால் மற்றும் லஜ்னாக்களுடைய இஜ்திமாக்கள் நடைபெற்றன. அதில் நான் கலந்து கொண்டேன். இறை அருளால் நான் அங்கு செல்வது மற்றும் அங்கு நடைபெற்ற இஜ்திமாவில் கலந்து கொள்வதற்காக எடுக்கப்பட்ட முடிவில் அல்லாஹ் பரக்கத்தை ஏற்படுத்தியிருந்தான். முதன்முறையாக நான் இஜ்திமாவில் அத்ஃபால்களுக்காக உரையாற்றினேன். அவர்களைப் பற்றிய சில விஷயங்களைப் பேசினேன். அங்கேயே எனக்கு உங்களுடைய அறிவுரைகளுக்கேற்ப செயல்படுவோம். மேலும் அல்லாஹ் அதற்கான வாய்ப்பளிப்பதற்காக துஆ செய்யவும் என எனக்கு கடிதம் வந்தன. சிலருடைய உதாரணத்தை நான் எடுத்துரைத்தேன். மொபைல் போன் வைத்திருப்பதன் பக்கம் குழந்தைகளுக்கு கவனம் ஏற்பட்டு வருகிறது. அதிலிருந்து தவிர்ந்து இருப்பதாகவும், டி.வி., இன்டர்நெட்டில் முழுமையாக உட்கார்ந்து இருக்கக்கூடியவர்கள் அதிலிருந்து தவிர்ந்து இருப்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

உண்மையான விஷயம் நடுநிலைமையாகும். நமது குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் இது தெரிந்திருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு அனுமதிக்கப்பட்ட விஷயமும் நடுநிலையில் நின்றவாறு செய்ய வேண்டும். மேலும் தவறான மற்றும் அனுமதிக்காதவற்றின் பக்கம் போகக் கூடாது. எனவே இந்த நிலை நமது குழந்தைகளிடமும், இளைஞர்களிடமும் ஏற்பட்டு விட்டால் பிறகு இந்த குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட்டு விடும். மேலும் இதன் மூலம் ஜமாஅத்தின் ஒட்டுமொத்த தர்பிய்யத்திலும் முன்னேற்றம் ஏற்படும். இதைப்போன்று குத்தாமுல் அஹ்மதிய்யாவும் எனது உரையைக் கேட்டு நல்ல முறையில் கட்டுப்படுதலின் உணர்வைக் காட்டினார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் தொடர்ந்து செய்வதற்கான வாய்ப்பளிப்பானாக. மேலும் இவர்கள் விஷயத்தைக் கேட்டு உடனே லெப்பைக் வந்து விட்டோம்

என்று கூறுகின்றார்கள். அல்லாஹ் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. லஜ்னாக்கள் மத்தியிலும் மிகச் சிறப்பான முறையில் இஜ்திமா நடைபெற்றது.

இதனைப் பற்றியும் இதற்கு முன்பு கூறியிருந்தேன். ஆனால் ஒரு விஷயம் என்னவென்றால், நான் உலகத்திலுள்ள அனைத்து லஜ்னாக்களுக்கும் கவனமூட்ட விரும்புகின்றேன். குத்பா சம்பந்தமாக ஒரு பெண்மணி எனக்கு எழுதியிருக்கிறார். குத்பா கொடுக்கப்பட்ட சமயத்தில் மெயின் ஹாலில் மிகவும் அமைதி காக்கப்பட்டது. ஆனால் குழந்தைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட ஹாலில் குழந்தைகளால் ஏற்படக்கூடிய கூச்சல் அதில் இருக்கத்தான் செய்யும். தாய்மார்கள் நாம் தூரத்தில் உட்கார்ந்து இருக்கின்றோம் என்று எண்ணி வீண்பேச்சுக்களில் ஈடுபட ஆரம்பித்து விடுகின்றார்கள். பெண்களுக்கு தனிப்பட்ட ஹால் கொடுக்கப்படுவது அங்கு குழந்தைகள் வைத்துள்ள பெண்கள் குழந்தைகளை முடிந்த அளவு சைகையினால் அமைதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் நீங்கள் முழுமையான முறையில் உரைகளைக் கேளுங்கள். நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பாருங்கள்; கேளுங்கள். உங்களுக்கு கொடுக்கப்படக்கூடிய ஹாலில் நீங்கள் சொந்தக் கதைகளைப் பேசுவதற்காக கிடையாது. வருங்காலத்தில் இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அமைப்பாளர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பிராங்ஃபோர்ட்டில் ஜமாஅத்தின் மற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நான் கூறியது போன்று ரிப்போர்ட்டில் அதன் விளக்கம் வந்து விடும். ஏறக்குறை இரண்டு வாரங்கள் அங்கு தங்கியிருந்தேன். பிறகு அங்கிருந்து நார்வே பயணம் சென்றேன். நீங்கள் குத்பாவில் கேட்டிருப்பீர்கள். நார்வேயில் பள்ளிவாசல் நஸ்ர் உடைய திறப்பு விழா நடைபெற்றது மாஷா அல்லாஹ். மிகவும் அழகான பள்ளிவாசல் ஆகும். இங்கிருந்தும் சிலர் சென்றிருந்தார்கள். அவர்களும் அதனை கண்டிருப்பார்கள். மிகவும் பெரியதாகும். இது வட ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசல் கிடையாது. மாறாக எண்ணத்தின்படி மட்டுமல்ல. மாறாக, உண்மையிலேயே பைத்துல் ஃபுதூஹ் மஸ்ஜிதிற்குப் பிறகு பைத்துந் நஸ்ர் ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசல் ஆகும். அங்குள்ள ஜமாஅத் மிகச் சிறியதாகும். ஆனால் இந்த பள்ளிவாசலைப் பார்த்து இது மிகப்பெரிய ஜமாஅத் என்றும் இது பணக்கார மக்களுடைய ஜமாஅத் என்றும் தோன்றும். ஆனால் இவை இரண்டும் தவறாகும். இது மிகப்பெரிய ஜமாஅத்தும் கிடையாது. இது பணக்கார ஜமாஅத்தும் கிடையாது. சிந்தனை வருவதற்கும், எண்ணம் தோன்றுவதற்கும் அவசியம் இருந்தது. அது வந்தவுடன் கவனம் ஏற்பட்டது.

நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களது காலத்தில் இந்த பள்ளிவாசலுக்குரிய நிலம் வாங்கப்பட்டது. ஒருவேளை அப்போது பள்ளிவாசலுக்கு அடித்தளம் அமைப்பதற்காக கட்டப்பட்டிருக்கலாம். என்ன அமைப்பு என்று தெரியவில்லை. ஆனால் பிறகு கட்டிடத்தின் வடிவத்தில் மாற்றம் செய்யப்பட்டது. மேலிடம் அப்போது 3 அல்லது 4 மில்லியன் குரோன் அல்லது ஏறக்குறைய 4, 5 ஆயிரம் டாலர் பவுண்ட் அவர்களுக்கு வழங்கியது. பிறகு உங்களது வசதிற்கேற்ப அந்தப் பள்ளிவாசலை கட்டுங்கள் எனக் கூறப்பட்டது. 2003 லிருந்தே நான் இவர்களுக்கு கவனமூட்ட ஆரம்பித்தேன். ஆனால் ஜமாஅத் அவர்களுடைய இடத்தை விட்டு அசையவே இல்லை. சில சமயங்களில் ஒரு பிரச்சனையும், வேறு சில சமயங்களில் வேறு சில பிரச்சனைகளும் வர ஆரம்பித்தன. என்னையும் எந்த அளவு கஷ்டப்படுத்தினார்கள் என்றால், நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்களோ செய்யுங்கள் என நான் கூறி விட்டேன்.

பெரிய பள்ளிவாசல் கட்ட முடியவில்லை என்றால் வேறெங்காவது இடம் வாங்கி ஒரு சின்ன பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்றேன். ஒரு சமயத்தில் அந்த ஜமாஅத் இந்த இடத்தை விற்று விடலாம் என நினைத்தது. விற்கக்கூடாது என சிலர் கூறினர். இறுதியில் ஊரிலிருந்து ஏர்போர்ட்டிற்குச் செல்லக்கூடிய பாதையில் வாய்ப்பாக இந்த இடம் அமைந்துள்ளது. உயர்வான இடமாகும். எனவே இதனை விற்கக்கூடாது என தீர்மானிக்கப்பட்டது. நான் 2005 –ல் அங்கு சென்ற போது எதார்த்தமாக அங்கு ஜுமுஆ தொழுகைக்காக வாங்கப்பட்ட ஹாலும் அந்த இடத்தை ஒட்டியதாகவே இருந்தது. நான் ஜுமுஆ குத்பாவில் அவர்களுக்கு

கவனமூட்டினேன். இன்ஷா அல்லாஹ் நார்வேயில் பள்ளிவாசல்கள் கட்டப்படும். ஒன்று, இரண்டு கிடையாது. மாறாக இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பள்ளிவாசல்கள் கட்டப்படும். இது இறை நியதியாகும். அவன் தான் ஜமாஅத்தைப் பரப்ப வேண்டும். ஆனால் உங்களது வருங்கால சந்ததிகள் இந்தப் பக்கமாக செல்லும் போது இந்த அழகிய வாய்ப்பான பிளாட் நமது பாட்டன்மார்களுக்கு கிடைத்தது. ஆனால் அவர்கள் தனது கையிலிருந்து இதனை நழுவவிட்டு விட்டனர் என்று கூறுவார்கள். கொஞ்சமாவது அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எடுத்த தீர்மானங்கள் மற்றும் எண்ணங்களை முழுமையாக்க முயற்சி செய்யுங்கள். ஏறக்குறைய இதுபோன்ற வார்த்தைகள் மூலம் தான் கவனமூட்டினேன். நீங்கள் உங்களது சந்ததிகளுக்கு முன்பு நல்ல முன்மாதிரியை நிலைநாட்டுங்கள் என்றேன். மேலும் அவர்களது துஆவிற்கு வாரிசாகுங்கள் என்றேன்.

எவ்வாறிருப்பினும் இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தின் அழகு ஆகும். காலத்தின் கலீஃபாவுடைய கூற்றைக் கேட்டவுடன் அதனை நிறைவேற்ற முயற்சி செய்வார்கள். அவர்களிடத்தில் ஓர் எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்பட்டு விடுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இவ்வாறு தான் கூறியுள்ளார்கள். அதாவது ஜமாஅத்தின் நல்லொழுக்கம் மற்றும் நன்றியுணர்வைக் கண்டு நமக்கும் ஆச்சரியமாக இருக்கின்றது. எவ்வாறிருப்பினும், நார்வே ஜமாஅத் தீர்மானம் செய்தார்கள். கவனமூட்டப்பட்ட பிறகு அவர்களது கண்களும் திறந்தன. பிறகு தியாகங்கள் செய்வதற்கான முன்மாதிரியையும் நிலைநாட்டினார்கள். இவர்களது விஷயம் மிகப் பெரியதாகும். சிலவற்றை நான் நார்வேயில் கொடுத்த குத்பாவில் கூறியிருந்தேன். ஏறக்குறைய 100 மில்லியன் குரோனை விட அதிகமாக தியாகம் செய்து இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. சிலருக்கு குரோனுடைய கணக்கு விளக்கமாக தெரிய வருவதில்லை. இது ஏறக்குறைய 12 இலட்சம் பவுண்ட் ஸ்டெர்லிங் ஆகும். இது 12 இலட்சம் பவுண்ட் கிடையாது. 12 மில்லியன் பவுண்ட் ஆகும். தொகை இதனை விட அதிகமாகும். நான் கூறியது போன்று ஜமாஅத் மக்கள் மிகப்பெரிய பணக்காரர்கள் ஒன்றும் கிடையாது. கவனமூட்டப்பட்டது; நம்பிக்கையூட்டப்பட்டது. வரக்கூடிய சந்ததிகளுக்கு என்ன முன்மாதிரியை விட்டு விட்டு செல்லப் போகிறீர்கள் என எச்சரிக்கை செய்யப்பட்டது. இது தற்காலிகமான உணர்வு கிடையாது. அவர்களிடம் தற்காலிகமான எழுச்சி ஒன்றும் வெளிப்படவில்லை. எப்போதும் அஹ்மதிகளிடம் நன்மையின் நரம்பு உணர்ச்சி பெற்றது. இது தற்காலிகமான உணர்ச்சியாக இருந்தால் ஒரு வருடத்தில் களைத்துப் போய் உட்கார்ந்திருப்பார்கள். எனவே சில சமயங்களில் எப்படிப்பட்ட சூழ்நிலை வந்ததென்றால் அமைப்பாளர்கள் கவலைக்குள்ளாகி எனக்கு கடிதம் எழுதினார்கள். பிறகு அவர்களுக்கு புரிய வைக்கப்பட்டது. கடைசியில் 5 அல்லது 6 வருட தியாகத்திற்குப் பிறகு இந்தப் பள்ளிவாசல் அங்கு கட்டப்பட்டது. அங்கு வெறும் 800 முதல் 900 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். அவர்கள் இதனை கட்டி முடித்துள்ளார்கள். நான் கூறியது போன்று ஊரிலிருந்து ஏர்ப்போட்டிற்கு செல்லக்கூடிய வழியில் இது அமைந்துள்ளது. அங்கு இது மிகவும் அழகாக தோற்றமளிக்கின்றது. அந்நாட்டு பிரதமரும் இந்த சாலையில் இந்த பள்ளிவாசல் அழகை இன்னும் மெருகூட்டுகிறது என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஏறக்குறைய தினமும் 80 ஆயிரம் முதல் 90 ஆயிரம் வாகனங்கள் இவ்வழியாக செல்கின்றன. இந்த பள்ளிவாசலைக் காணவும் செய்கின்றனர்.

கூறுகின்றார்கள்: ஒரு தடவை ஏதாவது ஒரு பொருளின் சுவை ஒட்டிக்கொண்டால் பிறகு அதனை பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டேயிருக்கத் தோன்றும். நமது நார்வே ஜமாஅத் பலரிடம் இந்த நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் 10 வருடம் வரை பள்ளிவாசல் கட்டப்படுமா? கட்டப்படாதா? என பல சாக்குப்போக்குகளை கூறி வந்தார்கள். இதற்கு எவ்வளவு கஷ்டங்கள் இங்கு ஏற்படுகின்றன என ஒரு அட்டவணையே தந்தார்கள். தற்போது மேலும் வேறொரு இடம் உள்ளது. அது நகரம் ஆகும். கிறிஸ்டியன் சேன்ட் அதன் பெயராகும். அது சிறிய ஜமாஅத் ஆகும். நாம் அங்கு பள்ளிவாசல் கட்ட வேண்டும். அதற்கும் செலவு அதிகமாக வருகின்றது. ஏனென்றால் நார்வேயில் விலைவாசி மிக அதிகமாகும். நான் அவர்களிடம் கூறினேன். இப்போதுதான் இந்த பள்ளிவாசலை நீங்கள் முழுமைப்படுத்தியுள்ளீர்கள். எவ்வாறு உடனே புதிய பள்ளிவாசலைக் கட்டத் தொடங்குவீர்கள் என்றேன். தற்போது மாஷா அல்லாஹ் அவர்களுக்கு எவ்வளவு

தைரியம் வந்துள்ளது என்றார். செயற்குழுவும், மேலும் சில மக்களும் தனிப்பட்ட முறையில் நாங்கள் இதனைக் கட்டுவோம். அல்லாஹ்தான் அருள் செய்யக்கூடியவனாக இருக்கின்றான் என்றார்கள்.

இந்த எழுச்சியும் உணர்ச்சியும் தான் அஹ்மதிகளிடம் உள்ளது. ஒரு தடவை முடிவு எடுத்து விட்டால் பிறகு எந்த விதமான தடையும் இல்லை. நிய்யத் நல்லதாக இருந்தால் எல்லா விதமான தடையும் உடைந்து விடும். ஒவ்வொரு தடையும் அகன்று விடும். இந்த விஷயங்கள் அனைத்தும் ஒரு சில அல்லது பல மனிதர்களுடைய மேன்மை கிடையாது. மாறாக இது அல்லாஹ்வின் அருள் ஆகும். அவன்தான் பரக்கத்தை ஏற்படுத்துகின்றான். மேலும் உள்ளங்களை மாற்றுகின்றான். இது அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதியின் ஆதாரமாகும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினான்.

நாம் வானத்திலிருந்து வஹி அறிவிக்கப்பட்டவர்கள் உமக்கு உதவி புரிவார்கள்.

எண்ணங்கள் நல்லதாகும் போது, நிய்யத் நல்லதாகும் போது துஆவின் பக்கமும் அல்லாஹ்வின் பக்கமும் கவனம் ஏற்பட்டது. பிறகு அல்லாஹ் அவர்களது உள்ளங்களை எவ்வாறு திறந்து விட்டான் என்றால், எந்நேரமும் அவர்கள் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பணியை தொடர்ந்து செய்வதற்கான வேலையை அவர்களுடைய விருப்பமாகிய இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதற்காக பள்ளிவாசல்களை கட்டுங்கள் என்பதை நிறைவேற்ற வேண்டிய வேலையைச் செய்வதற்கு அந்த பள்ளிவாசலைக் கட்டக்கூடியவர்கள் இபாதத் செய்யக்கூடியவர்களாகவும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனையின்படி அமல் செய்யக்கூடியவராகவும் இருக்க வேண்டும். பிறகு இஸ்லாம் எவ்வளவு அழகான முறையில் அறிமுகமாகும் என்றால் உலகம் இதன் அழகைக் கண்டு ஆச்சரியப்படும்.

நார்வே ஜமாஅத் நல்ல காரியத்திற்காக தனது நிலையை மாற்றுவதற்கு முயற்சி செய்தது. அல்லாஹ்வும் அசாதாரணமான முறையில் ஊக்கம் மற்றும் வாய்ப்பிலும் பரக்கத்தை ஏற்படுத்தினான். மேலும் உலகில் பல இடங்களில் அவ்வாறு செய்து கொண்டுதான் வருகின்றான்.

இந்த முறை சுற்றுப் பயணத்தின் போது முன்பை விட ஈமான் மற்றும் நல்லொழுக்கத்தில் முன்னேறிய மக்கள் அதிகமாக தென்பட்டனர். அல்லாஹ் இவர்களது ஈமான் மற்றும் பற்று உறுதியினை மேன்மையாக்கிக் கொண்டே செல்வானாக. ஒவ்வொரு அஹ்மதியின் ஈமான் மற்றும் பற்று உறுதியை மேன்மையாக்கிக் கொண்டே செல்வானாக!

நார்வேயும் ஐரோப்பாவில் அதிகமாக தர்பிய்யத் தேவைப்படும் இடங்களில் ஒன்றாகும். உலக இன்பத்தின் பக்கம் ஈர்ப்பும் உள்ளது. ஆனால் இந்த முறை அங்கு புரிய வைத்த பிறகு ஆண், பெண், ஆண் பிள்ளை, பெண் பிள்ளை ஆகிய அனைவரின் பார்வையிலும் ஒரு வெட்க உணர்வும் தென்பட்டது. ஒரு வருத்தமும் தென்பட்டது. மேலும் நாம் நமது குறைபாடுகளைக் களைவோம் என ஒரு உறுதிப்பாடும், ஒரு எண்ணமும் தென்பட்டது.

குறிப்பாக, வாக்கிஃபீனே நவ் மற்றும் வாக்கிஃபாதே நவ் ஆகியோர் நான் அவர்களிடம் அவர்களுடைய வகுப்பில் புரிய வைப்பதற்குப் பிறகு இதனை வெளிப்படுத்தினார். வாக்ஃபாத்தே நவ் மிக அதிகமாக உறுதி கொண்டதை வெளிப்படுத்தினார்கள். நாங்கள் எங்களுடைய நிலையையும் மாற்றுவோம். மேலும் எங்களுடைய சுற்றுப்புறத்தின் நிலையையும் மாற்றுவோம் என்று கூறினார்கள். மேலும் பர்தா, ஆடை மற்றும் அஹ்மதி பெண்பிள்ளைகளின் நன்மையில் ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகளை எண்ணி வருத்தம் அடைந்தனர். அதனை களைவது மட்டுமின்றி ஜமாஅத் அளவிலும், வெளியிலும் ஒரு முன்மாதிரியாக இருப்போம் என உறுதிபூண்டுள்ளனர். அல்லாஹ் அவர்களுக்கும் வாய்ப்பளிப்பானாக. மேலும்

உலகத்திலுள்ள அனைத்து அஹ்மதி ஆண் பிள்ளைகளும் மற்றும் பெண் பிள்ளைகளும் அஹ்மதிய்யத்தின் முன்மாதிரியாகத் திகழ வாய்ப்பளிப்பானாக. நமது பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளிடம் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டால் வருங்கால சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான உத்திரவாதம் கிடைத்து விடும். அல்லாஹ் தான் அருளை ஏற்படுத்துகின்றான்.

எவ்வாறாயினும், நார்வே ஜமாஅத் ஐந்து வருடத்தில் பல விஷயங்களின் முன்னேற்றம் அடைந்திருப்பதை காண முடிகிறது. நார்வேயில் அந்நியர்களுடன் நடந்த சந்திப்பைப் பற்றி கூறுகின்றேன். இதற்கு முன்பு நார்வே அரசாங்கத்திற்கு நன்றி செலுத்த விரும்புகின்றேன். அங்கு ஜுலையில் ஒரு அசம்பாவிதம் நடைபெற்றது. அதனால் எனக்கு மிகவும் கடுமையான பாதுகாப்பு அளித்து உதவினார்கள். பள்ளிவாசலுக்கும் முழுமையான பாதுகாப்பு அளித்தார்கள். அல்லாஹ் அதற்கான கூலியை அவர்களுக்கு தருவானாக. அங்கு பாராளுமன்ற இல்லத்தை பார்வையிடுவதற்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்தார். அதில் 4 அல்லது 5 எம்.பி.க்கள் இருந்தனர். அங்கு சின்ன வரவேற்பும் நடைபெற்றது. அங்கும் நிகழ்ச்சி நல்ல முறையில் அமைந்தது. அங்குள்ள பாராளுமன்றத்தின் President ஐ Speaker என்று கூறுவார்கள். ஆன்டர்சன் என்ற பெயருடைய அவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவருக்கும் ஜமாஅத்தைப் பற்றிய விளக்கத்தை கூறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கம், அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்புகள் பற்றியும் மிகவும் விரிவாக பேசப்பட்டது. அப்போது அவர் ஷியா, ஸுன்னி போன்ற பிரிவினருக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு என்று கேட்டார். இந்த விஷயங்கள் இன்னும் விரிவாக செல்லும். இதுபோன்று உரையாடல் நடைபெற்றது.

இதைப்போன்று பல்வேறு பத்திரிகைகள், ரேடியோ மற்றும் டி.வி. சேனல்களின் பிரதிநிதிகளுடனும் நேர்காணல் நடைபெற்றது. நார்வே சிறிய நாடு ஆகும். ஒட்டுமொத்த மக்கள்தொகை ஐந்து மில்லியன் ஆகும். என்னிடம் மூன்றரை இலட்சம் வாசகர்களைக் கொண்ட ஒரு பத்திரிகை இந்த நேர்காணல் எடுத்தனர். நல்ல முறையில் இன்டர்வியூ எடுத்தார்கள். பள்ளிவாசல் கட்டப்படுவதன் நோக்கம், இஸ்லாத்தின் போதனைகள், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கம் என்ன என்பதுபோன்ற அனைத்து விஷயங்களையும் இவர்கள் பத்திரிகைளிலும், ரேடியோவிலும், டி.வி. சேனல்களிலும் வெளியிட்டார்கள். பல நேரங்களில் இதனை ஒளிபரப்பு செய்தனர். பிறகு ஜமாஅத்திற்கு காலத்தின் கலீஃபாவுடன் என்ன தொடர்பு போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன. இதற்கு தெளிவான, விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இதனை அவர்களும் கண்டுணர்ந்தனர். வெளியில் சென்ற போது ஜமாஅத் உறுப்பினர்களிடமும் கேள்வி கேட்டார்கள். பிறகு ஜமாஅத் உறுப்பினர்களின் உணர்வுகளை அவர்கள் கேட்கும் போது ஆச்சர்யப்பட்டனர். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் ஒன்றாக இணைந்துள்ளதை கண்டார்கள். மேலும் முஸ்லிம்களைப் பற்றிய பல விஷயங்கள் பேசப்பட்டன. முஸ்லிம்கள் உங்களைப் பற்றி என்ன கூறுகின்றார்கள்? நீங்கள் அவர்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? உங்களது பள்ளவாசலை, பள்ளிவாசல் என அழைப்பதிலிருந்து ஏன் தடுக்கின்றார்கள். உங்களை முஸ்லிம்கள் என்று அவர்கள் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை போன்ற விஷயங்கள் விளக்கமாக பேசப்பட்டன. அனைத்தும் ரிப்போர்ட்டில் வந்து விடும்.

நார்வேயில் நமது பள்ளிவாசலின் வரவேற்பு நடைபெற்ற போது அதில் நார்வே நாட்டை பூர்வீகமாகக் கொண்ட 120 பேர் இருந்தனர். அதில் 12 பேர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவர். அதில் பாதுகாப்பு அமைச்சர், பிரதமரின் பிரதிநிதியாக அங்கு வந்திருந்தனர். பிரதமருடைய தூதுச் செய்தியை அவர் அங்கு படித்துக் காண்பித்தார். இதற்கு முன்பும் பல விஷயங்கள் பேசப்பட்டு வந்தன. அவர் கூறினார்:

லாஹுரில் நடந்த சம்பவம் மூலமாக உங்களுக்கு ஏற்பட்ட வேதனையை என்னால் உணர முடிந்தது என்றார். நானும் நார்வேயில் அசம்பாவிதம் நடைபெற்ற போது தூதுச் செய்தியினை அனுப்பியிருந்தேன். அதில் இதுபோன்றுதான் அஹ்மதி சகோதரர்களும் ஷஹீதாக்கப்படுகின்றார்கள் என்றேன்.

பிறகு அவருக்கு ஜமாஅத்தின் சேவைகள், கல்விச்சேவை, மனித சேவை, மருத்துவ உதவி போன்றவை பற்றி விளக்கமாகக் கூறப்பட்ட போது, இவ்வாறு முஸ்லிம்களிடம் ஓர் அமைப்பு இவ்வாறெல்லாம் செயல்படுகின்றதா? என ஆச்சரியப்பட்டார். பிறகு அவர் கூறினார்: நான் சிறிது நேரத்திற்காககத்தான் இங்கு வந்துள்ளேன் என்றார். இரவு 7.45 மணிக்கு அவர் திரும்பிப் போக வேண்டியதிருந்தது. ஆனால் எனக்கு முன்பு பேசியவர் கொஞ்சம் நேரத்தை அதிகமாக எடுத்து விட்டார். எனவே எனது உரை 7.45 மணிக்கு ஆரம்பித்தது. ஆனாலும் அவர் மிகவும் அமைதியாக உட்கார்ந்திருந்தார். எனது உரையும் மிக நீண்டதாக இருந்தது. ஸ்கான்டிலேவியன் நாடுகளை நான் பார்த்திருக்கின்றேன். 30 அல்லது 35 நிமிடத்தை விட அதிக நேரம் கேட்பதற்கு பழக்கம் இல்லாதவர்கள் ஆவார்கள். ஆனால் எனது உரை ஏறக்குறைய 50 நிமிடங்கள் இருந்தது. பிறகு நான் வருத்தம் தெரிவித்தேன். அப்போது அவர் கூறினார். இல்லை; இல்லை. நான் இன்று எனது நேரத்தை சரியாக பயன்படுத்தியிருக்கின்றேன் என்றார். பிறகு உணவு சாப்பிட்டார். 7.45 மணிக்கு போக வேண்டியவர் 9.30 மணி ஆகியும் கூட போக மனமில்லாமல் இருந்தார். அங்கு பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டன. வரவேற்பின் போது பள்ளிவாசல் சம்பந்தமாக பேசும் போது பள்ளிவாசல்கள் ஓர் இறைவனை வணங்க வேண்டும் என்பதற்காக கூறப்படுகிறது என்றேன். இங்கு ஓரிறைவனை வணங்குவதற்காக மனிதன் வரும்போது எந்த விதமான தீவிரவாதமோ அல்லது ஏதாவது அமைதியின்மையின் வெளிப்பாடு இருக்கமோ என்ற கேள்விக்கே இடமில்லை என்றேன். ஸ்காண்டிலேவியன் நாடுகளில் சில பகுதிகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகளின் மீது அதிக அளவு ஆட்சேபனைகள் வைக்கின்றனர். எனவே குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனைகள் மூலம் விளக்க விரும்பினேன். அதனையும் விளக்கினேன்.

உலகில் அமைதியின்மை உள்ளது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த உலக அமைதிக்காக இரவுகளில் இந்த மக்களை நேரான வழியில் நடத்துவானாக என்றும், இவர்கள் இறைவனை கண்டறிய வேண்டும் என்ற உணர்வும் தான் இருந்தது. நான் கூறினேன். ஒருவேளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த உலகத்தை ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் பிறகு இந்த இரவு நேர துடிப்பு ஏற்பட்டிருக்காது. இந்த இரவு நேரத் துடிப்பு உலக அமைதிக்காக மட்டும் கிடையாது. மாறாக மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கைக்காவும் தான் இருந்தது. அங்கும் அமைதி கிடைக்க வேண்டும் என்ற துடிப்பும், தவிப்பும்தான் அவர்களிடம் இருந்தது. மிக நல்ல முறையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் அடிப்படையில் மிக விளக்கமான முறையில் பேசப்பட்டது. இந்த விஷயங்களையெல்லாம் நான் Reception -ல் எடுத்துரைத்தேன்.

இதனைப்போன்று கார்ல் மார்க் என்ற பிரிவின் தலைவரும் அங்கு வந்திருந்தார். ஸ்காண்டிலேவியன் நாடுகளில் கட்சிகள் தமக்கிடையில் ஒரே கட்சியாகத்தான் கருதப்படும். சிஸ்டர் கட்சி ஒரு கட்சியாகும். இது பல நாடுகளில் ஒரே பெயரில்தான் இருக்கின்றது. இது ஒன்று மற்றொன்றுக்கு உதவியும் செய்யும். வந்திருந்த தலைவர் தற்போதயை அரசின் எதிர்க்கட்சியான சுவீடன் கட்சியின் உறுப்பினர் ஆவார். இவரும் நல்ல ரீதியில் தனது கருத்துக்களை கூறினார். இவர் ஜல்ஸாவுக்கு வந்திருக்கின்றார். நான் ஜல்ஸாவுக்கும் வந்திருக்கின்றேன் என்று கூறினார். அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்துக் காட்டுகின்றது. இதன் மூலம் எந்த விதமான அபாயமும் இல்லை. இது உண்மையான அமைதியினை ஏற்படுத்தக் கூடியதாகும் என்றார்.

இதனைப் போன்று ஒருநாள் செய்தி கிடைத்தது. அங்குள்ள முன்னாள் பிரதமர் அவரும் பள்ளிவாசலைப் பார்க்க வருகின்றார் என்றும் என்னைப் பார்க்க விரும்புவதாகவும் எனக்கு தெரிவிக்கப்பட்டது. இவர் நார்வேயின் மனித உரிமைக் கழகத்தின் தலைவர் ஆவார். இவரிடமும் மிக நீண்ட நேரம் பேசப்பட்டது. ஜமாஅத்தில் சேவைகள், உலகில் ஜமாஅத்துடன் என்ன நடக்கிறது என்பது பற்றி பேசப்பட்டது.

இந்த பள்ளிவாசல் மூலம் ஏற்பட்ட அறிமுகம் எவ்வாறானதென்றால் முழு உலகில் நடைபெறக்கூடிய கட்டுமானப் பணிகளைப் பற்றி வெளியிடக்கூடிய ஒரு பத்திரிகை A World Architecture News என்ற பெயரில் இணையத்தில் உள்ளது. ஒவ்வொரு மாதமும் 10 அல்லது 11 மில்லியன் மக்கள் இதனைப் பார்க்கின்றார்கள்.

இவர்களது வாராந்திர பத்திரிகை E-News Letter -ம் இருக்கிறது. 147 மக்களுக்கு மட்டும் தான் இமெயில் அனுப்பப்படும். கட்டுமானப் பணிகள் தொடர்பாக உலக அளவில் கட்டுமானப் பணி செய்யக் கூடியவர்கள், மாணவர்கள், கட்டுமான அமைப்புகள் போன்றோர் இதன் உறுப்பினர் ஆவார்கள். இந்தப் பத்திரிகை மற்றும் இந்த இணையதளம் பள்ளிவாசலின் படத்தையும் ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசல் இது என்றும் இதனை திறந்து வைக்க அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் வந்திருக்கின்றார் என்றும், இது சமுதாயத்தின் முக்கய இடமாகும் என்றும், குறிப்பாக மிக அழகான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே இந்த வகையிலும் பள்ளிவாசலின் அறிமுகத்தை எடுத்துக் கூறினேன். இதனைப்போன்று இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் மிக விரிவாக விளக்கப்பட்டது. Media Internet Technology Crisis.com. இதுவும் முக்கியமான பெயராகும். இது டெக்னாலஜி பற்றிய செய்திகளை வெளிவிடும். இதுவும் பள்ளிவாசலின் சார்பில் அஹ்மதிய்யத்தைப் பற்றியும் இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றியும், Reception பற்றியும் மிகப்பெரிய செய்தியினை வெளியிட்டுள்ளது. மாறாக இதில் நார்வேயின் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றாகிய புதிய நார்வே உருவாக்குவதில் ஒரு திறவுகோலாக மதங்கள் இருக்கின்றன. எனவே ஒவ்வொருவருக்காகவும் நமது உள்ளத்தை திறக்க வேண்டும். ஒவ்வொருவரையும் நம்முடன் இணைக்க வேண்டும். இன்று நாம் இதனை பார்க்கின்றோம். அவர் கூறியதாக பத்திரிகையாளர் எழுதுகிறார். இது எனது பிரார்த்தனைக்குரிய இடம் கிடையாது. இருந்தபோதிலும் இங்கு நான் உண்மையான மகிழ்ச்சியை உணருகின்றேன் என்ற செய்தியும் அதில் வெளியிடப்பட்டுள்ளது.

நான் அங்கு நடைபெற்ற அசம்பாவிதத்திற்கு வருத்தம் தெரிவித்ததையும் எனது சார்பில் அதில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

பிறகு நார்வேயிலிருந்து ஹம்பெர்க்கிற்கு திரும்ப பயணம் மேற்கொள்ளப்பட்டது. அங்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னை சந்திப்பதற்காக வந்தனர். அவர்களுக்கு பாராளுமன்றத்தில் நல்ல மதிப்பு உள்ளது. மனித உரிமைக் கழகத்தின் சார்பில் அவர்கள் பணி செய்கின்றார்கள். அவர்களுடன் விரிவான முறையில் பேசப்பட்டது. அப்போது நான் அவர்களிடம் கூறினேன். அதாவது மனித உரிமை என்றால் என்ன? மேலும் நான் சில கேள்விகளைக் கேட்டேன். சிறிது நேரம் கழிந்த பிறகு என்னிடம் நாங்கள் இதற்கு தயார் செய்து விட்டு வரவில்லை என்றனர். பிறகு நான் உண்மையில் எவ்வாறு உலகத்தில் அமைதியினை நிலைநாட்ட முடியும் என்று எடுத்துக் கூறினேன். திருக்குர்ஆனின் போதனை என்ன? உங்களுடைய சில மேற்கத்திய நாடுகள் என்ன செய்கின்றனர்? இதற்குப் பிறகு அவர்கள் வெளியே சென்று அவரை அழைத்து வந்த நமது இரண்டு ஜமாஅத் சகோதரர்களிடம் கூறினார்கள். அதாவது இவர் எங்களுக்கு சிந்திப்பிற்கான சில கோணங்களை கூறியுள்ளார். எங்களுடைய கோணத்திலும் நாம் சிந்தித்துப் பார்ப்போம். மேலும் உலகில் அமைதியை நிலைநாட்ட எப்படிப்பட்ட வழிகளை கடைபிடிக்க வேண்டும் என்பது தெரிய வர வேண்டும். மேலும் நான் அவரிடம் வெளிப்படையாக கூறினேன். ஒருபுறம் அதே சக்திகள் தான் அமைதியினை நிலைநாட்ட கோஷமும் போடுகின்றனர். அதே சக்திகள் தான் சண்டையிடக் கூடியவர்களுக்கு உதவியும் செய்கின்றது. இவ்வாறு அமைதி ஏற்பட முடியாது. பிறகு அமைதியின் பெயரில் நீங்கள் அநீதியிழைத்துக் கொண்டே செல்கிறீர்கள். லிபியா போன்றவற்றின் உதாரணம் உங்கள் முன்னால் இருக்கிறது. இருந்தபோதிலும் அவருக்கும் ஏதோ கொஞ்சம் புரிந்தது. நான் கூறினேன். திருக்குர்ஆனின் போதனை என்னவென்றால் அமைதியை ஏற்படுத்தி விட்டு திரும்பி வந்து விடுங்கள். பிறகு பழிவாங்குவது சொந்தக் காழ்ப்புணர்ச்சியை

வெளிப்படுத்துவது அல்லது சொந்த இலாபத்தின் பக்கம் கவனம் செலுத்துவது போன்றவை கூடாது என்பதாகும். இதுதான் திருக்குர்ஆனின் அழகிய போதனை ஆகும். இதன்படி அமல் செய்தால் மட்டும்தான் உலகில் அமைதியை ஏற்படுத்த முடியும். இல்லையென்றால் முடியாதது அவருக்கு ஏதோ கொஞ்சம் புரிய வந்தது. அவர் நான் சிந்திப்பேன் என்றும், எனது சுற்றுச்சூழலில் இதனை தெரியப்படுத்துவேன் என்றும் கூறினார்.

இங்கிருந்து நாங்கள் ஒருநாள் டென்மார்க்கின் ஒரு நகரம் நாக்ஸ்கோ. அங்கேயும் சென்றோம். அது அல்பானியன், போஸ்னியன் மக்களுடைய ஜமாஅத் ஆகும். ஏறக்குறைய 100 பேர் உள்ளனர். எனது சிந்தனையின்படி இங்கு பாகிஸ்தானி யாரும் கிடையாது. எனக்கு அங்கு செல்வது விருப்பமாக இருந்தது. மிகவும் நல்ல பற்று உறுதி கொண்ட மக்கள் ஆவார்கள். அங்கு சென்றதன் மூலம் பல நன்மைகளும் கிடைத்தன. அதனைப் பற்றி தெரிய வந்தது. சில வீடுகளில் பற்றுணர்வு மற்றும் நன்றியுணர்வில் எந்த அளவு முன்னேறியுள்ளனர் என்றால் ஆச்சரியமாக இருக்கின்றது. இதற்கு முன்னர் பார்த்ததும் இல்லை. சந்தித்ததும் இல்லை. ஆனால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இவ்வாறு காண முடிகின்றது. அனைவருடனும் சந்திப்பு நடைபெற்றது. அங்கு சென்றதன் மூலம் மிக அதிக பலன் கிடைத்தது. அங்கு ஓர் இரவையும் கழித்தோம். ஜமாஅத் சில நாட்களுக்கு முன்பு ஒரு சென்டரை வாங்கியுள்ளது. அங்கு ஜமாஅத் தொழுகை மற்றும் ஜுமுஆ தொழுகை நடைபெறுகிறது. தற்போது அதற்கு பள்ளிவாசலின் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள மேயர் உடைய பிரதிநிதியாக துணை மேயர் மற்றும் படித்த சில சான்றோர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. அப்போது நான் இங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு இடம் கிடைத்தால் நாங்கள் பள்ளிவாசல் கட்டுவோம் என்று கூறினேன். அப்போது அங்கு வந்திருந்த மேயர் வாக்குறுதி அளித்தார். மேயர் கூறினார். இடம் கிடைத்திருக்கின்றதோ இல்லையோ நாம் இங்கு பள்ளிவாசல் கட்டுவோம். ஏனென்றால் இந்த ஜமாஅத் ஓர் அமைதியான ஜமாஅத் ஆகும் என்பது எங்களுக்கு தெரிந்து விட்டது. இந்த நகரத்தில் சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு முன்பு நமது சென்டராக ஆக்கப்பட்ட இடத்தில் அங்குள்ள மக்கள் வந்து பெயின்ட் மற்றும் அசிங்கமான பொருட்களை எறிந்தனர். உள்ளூர் அமைப்பும், காவல்துறையினரும் நமக்கு உதவி செய்தார்கள். எதிர்ப்பு அங்கு இருக்கத்தான் செய்கிறது. இருந்தபோதிலும் அஹ்மதிய்யத்தின் தூது இஸ்லாத்தின் தூது எட்ட வைக்கப்படுகின்றது. படித்த மக்கள் மத்தியில் அஹ்மதிய்யத் இஸ்லாத்தின் உண்மையான போதனையை வெளிப்படுத்துகிறது என்பதை உணர்கிறார்கள். இதற்கு பல பத்திரிகைகள் நமது செய்திகளை வெளியிடுவதன் மூலம் மேலும் அதிகமாக தூதுச் செய்தி எட்ட வைக்கப்படுகிறது.

பிறகு இதனைப் போன்று திரும்பி வரும் போது பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியத்தில் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அதன் பெயர் பைத்துல் முஜீப் என்று வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொள்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது. இன்ஷா அல்லாஹ் இந்த பள்ளிவாசல் ஒரு வருடம் அல்லது அதற்குள் முழுமை அடைந்து விடும் என எதிர்பார்க்கலாம். மிகவும் அழகான பள்ளிவாசல் கட்டப்படுகின்றது. இது பெல்ஜியத்தின் முதல் பள்ளிவாசல் ஆகும். இந்த இலாக்காவில் ஏற்கனவே நமது மிஷன் ஹவுஸ் உள்ளது. அதன் பெயர் தில்பீகஸ் ஆகும். இந்த இலாக்காவுடைய மேயர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் தனது நல்ல எண்ணங்களை வெளிப்படுத்தினர். மேலும் வேறு சில கட்சிகளுடைய பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இவர்கள் அனைவருமே மஸ்ஜிதுடைய நிகழ்ச்சிகளையும், ஜமாத்தின் போதனைகளையும் மிகவும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டார்கள். அங்குள்ள மேயரும் தனது கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள். அந்த மேயர் கூறும்போது எனக்கு உங்களுடைய புகைப்படங்களைத் தாருங்கள். உங்களுடைய நிகழ்ச்சிகளின் சி.டி., டி.வி.டி. –க்களைத் தாருங்கள் என்றார். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைதிக்கான இந்த அழகிய போதனை மற்றும் பள்ளிவாசலை தனது சமுதாய மக்களுக்கு காண்பித்து, அவர்களிடம் நமது இலாக்காவிலும் இவ்வாறு அழகான பள்ளிவாசல்

மற்றும் அமைதிக்கான சூழல் விரைவில் வர வேண்டும் என்றார். மேலும் என்னுடைய உரையை அவர் தன்னுடைய அலுவலகத்தின் இணையதளத்திலும் வெளியிடுவேன் என்றார்.

பிறகு ஃபுவாது ஹைதர் சாஹிப் அவர் முஸ்லிம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். அவரும் தனது கருத்துகளை வெளியிட்டார். அதில் உலகம் முஸ்லிம்களுக்கு கிலாஃபத் இல்லாமல் எந்த விதமான எதிர்காலமும் இல்லை. அவர் என்னைப்பற்றி கூறினார். என்னுடைய சிந்தனைகள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சாந்தி சமாதானத்திற்கான தூதுச் செய்தி, தன்னுடைய பல மதத்தினை சேர்ந்த நண்பர்களுக்கு எந்தவித பாகுபாடுமின்றி முஸ்லிமாக இருந்தாலும் சரி, வேறு மதத்தினைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி. அதே போல் தனது சுற்றுசூழலில் வசிக்கும் மக்களுக்கும் கண்டிப்பாக எட்ட வைப்பேன் என்றார். மேலும் அவர் நமது முபல்லிக் சாஹிபிடம் கூறினார். இந்த வாரத்தில் என்னை வந்து சந்தியுங்கள் என்றார். இதற்கு முன்னரும் ஓரிரு முறை அவரை சந்தித்துள்ளார்கள். மிகவும் நல்லியல்பு கொண்ட மனிதர் ஆவார். மேலும் ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு வைத்துள்ளார். தைரியமிக்க வெளிப்படையான தனது கருத்துக்களை பேசக்கூடியவர் ஆவார். அல்லாஹ்வின் அருளினால் இவ்வாறு சுற்றுப்பயணம் செல்வதன் மூலமாக பத்திரிகைகளுக்கும் நமது பக்கம் கவனம் ஏற்படுகின்றது. அரசியல்வாதிகளுக்கும், தலைவர்களுக்கும், நமது பக்கம் கவனம் ஏற்படுகின்றது. படித்த சான்றோர்களுக்கும் நம் பக்கம் கவனம் ஏற்படுகின்றனது. இதனால் பல்வேறு பலன்கள் கிடைக்கின்றன. இருந்தபோதிலும் இது நமது முயற்சிகள் ஆகும்.

அல்லாஹ்தான் இதற்கான கனிகளை வழங்க வேண்டும். அல்லாஹ் இது போன்ற கனிகள் கிடைத்து கொண்டே இருக்கச் செய்வானாக. மேலும் ஒரு இலாக்காவைச் சேர்ந்த மேயரும் அங்கு வந்திருந்தார். அவர் கூறினார். இந்த விழாவில் கலந்து கொண்டது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

அவர் கூறுகின்றார்: இன்று ஒரு கல்வி அமைச்சர் யூத் பஸ்கத் நகரத்தில் ஒரு official சுற்றுப்பயணம் வருகின்றார். நான் மேயர் என்ற ரீதியில் அங்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாக இருந்தது. ஆனால் என்னுடைய இந்த வரலாற்று சந்தர்ப்பத்தில், இங்கு கலீஃபத்துல் மஸீஹ் வந்திருக்கும் போது, இந்த விழாவில் கலந்து கொள்வது தான் மிகவும் முக்கியமான, அவசியமான பணியாகும். எனவே நான் இன்று உங்கள் மத்தியில் இருக்கின்றேன். அல்லாஹ் அவருக்கு நற்கூலியை வழங்குவானாக.

பிறகு ஒரு இலாக்காவுடைய துணை மேயர், கவுன்சிலர் கூறினார். இந்தப் பகுதியிலுள்ள இந்த பள்ளிவாசலுக்கு அனுமதி பெற நான் ஜமாஅத் அஹ்மதிய்யா பெல்ஜியமிற்கு உதவி புரிந்துள்ளேன். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய தலைவர் கலீஃபத்துல் மஸீஹ்வுடைய குத்பாவை கேட்ட பிறகு நான் இந்த விஷயத்தை உறுதியாகவும், திடமாகவும் கூறுகின்றேன். ஜமாஅத் அஹ்மதிய்யாவிற்கு உதவி செய்வது பற்றி நான் எடுத்த முடிவும் மிகவும் சரியானதாகும். எனக்கு கலீஃபத்துல் மஸீஹ்வுடைய இந்தக் கூற்றைக் கேட்டு அதாவது இந்த பள்ளிவாசல் வெறும் பள்ளிவாசல் மட்டும் கிடையாது. மாறாக, பெல்ஜியம் மற்றும் இந்த பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு சாந்தி சமாதானத்திற்கான ஒரு அடையாளமும், ஒரு ஆதாரமும் ஆகும். ஆக, எல்லாவகையிலும் இந்தச் சுற்றுப் பயணம் பரக்கத் நிறைந்ததாக இருந்தது. அல்லாஹ்தான் இதில் பரக்கத்தை ஏற்படுத்தியிருந்தான்.

பெல்ஜியமின் ஒரு பிரிவு இஸ்லாத்திற்கு எதிராக சில நாட்களுக்கு முன்பு கடுமையான முறையில் இந்த பள்ளிவாசல் கட்டப்படக் கூடாது என பிரசுரங்களை வெளியிட்டனர். மேலும் ஒரு ஊர்வலம் நடத்துவதற்கும் தேதி குறிக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. சனிக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது. வியாழக்கிழமை ஊர்வலம் நடத்தப்பட்டது. ஆனால் மிகவும் குறைவான மக்கள் மட்டுமே இதில் இணைந்துள்ளார்கள். வேறெவரும் இதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. அல்லாஹ் சுற்றுச்சூழலை எவ்வாறு மாற்றி விட்டான் என்றால் இதனைப் பற்றி அரசாங்கத்திற்கு ஒரு அச்சம் இருந்து வந்தது. அது முழுவதுமாக மாறிவிட்டது. இவை அனைத்தும் அல்லாஹ்வுடைய அருள்கள் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது முயற்சிகள் அனைத்தும் சிறுபிள்ளைகளின் விளையாட்டுகளாகும். இன்று உலக அளவில் மக்களிடம் உள்ள அழுக்கை நம்மால் அகற்றவும் முடியாது. அதே போன்று மேன்மையான இறையன்பு அவர்களது உள்ளத்தில் நிரப்பவும் முடியாது. அதேபோன்று அனைவரும் ஒன்றுபோல் ஆகிவிட அவர்களுக்கிடையில் ஒரு அன்பை ஏற்படுத்தவும் முடியாது. இது அல்லாஹ்வுடைய வேலையாகும். திருக்குர்ஆனில் சஹாபா ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் பற்றி அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கி கூறுகின்றான்.

*அதாவது அவனே தன் உதவியினைக் கொண்டும், நம்பிக்கை கொண்டவர்களை கொண்டும் உமக்கு உறுதியளித்தான். அவன் அவர்களின் உள்ளங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து விட்டான். நீர் பூமியில் உள்ளவற்றயெல்லாம் அவர்களுக்காக செலவு செய்திருந்தாலும், உம்மால் அவர்களின் உள்ளங்களை இவ்வாறு இணைத்திருக்க இயலாது. ஆனால், அல்லாஹ் அவர்களுக்கிடையே நேரத்தை ஏற்படுத்தி விட்டான். நிச்சயமாக அவன் மிகைத்தவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். (8:64)*

எந்த இறைவன் இதற்கு முன்னர் இந்த வேலையை செய்தானோ அவன் இப்பொழுதும் இந்த வேலையை செய்வான். மேலும் இனியும் அவன் மீதுதான் நம்பிக்கை உள்ளது. நடக்க வேண்டிய காரியத்தில் இறைவனுடைய ரூஹ் ஊதப்படுகின்றது. எவ்வாறு தோட்டக்காரன் தனது தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிகின்றான். அப்போது அந்த தோட்டம் பசுமையாக இருக்கின்றது. இதனை போன்றே இறைவன் தன்னால் அனுப்பப்பட்டவர்களின் ஜமாஅத்திற்கு முன்னேற்றம் மற்றும் புத்துணர்ச்சி வழங்குகின்றான். மனித திட்டங்கள் மூலமாக உருவாக்கப்படும் பிரிவுகளில் சில நாட்களிலேயே அவர்களுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டு விடுகின்றன. எவ்வாறென்றால் சில நாட்களிலேயே முன்னேற்றம் அடைந்து அடைந்து கடைசியில் நின்று விடுகின்றன. பிறகு ஒவ்வொரு நாளும் அழிந்து கொண்டே செல்வார்கள். ஏனென்றால் அவர்களுடைய அடிப்படை மனிதனுடைய சிந்தனையால் உருவாக்கப்பட்டதாகும்.

எனவே, இது அல்லாஹ்வின் ஜமாஅத் ஆகும். இது முன்னேற்றம் அடையும். முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ் நமக்கும் நம்முடைய சின்னச் சின்ன முயற்சிகளைச் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. இதன் மூலம் நாமும் நன்மையில் பங்கு பெறுவோமாக. அல்லாஹ் நமது முயற்சிகளில் பரக்கத்தை ஏற்படுத்துவானாக. மேலும் நமக்கு முன்னேற்றத்தின் காட்சிகளையும் காண்பிப்பானாக. தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 21.10.2011**

Translated by : **Maulavi N. ZIYAUL HAQ**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**